1990 ஏப்ரல் 12]

மாண்புமிகு டாக்டர் எ. ராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நம்முடைய தானைத் தலைவர் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த போது நரிக் குறவர் இனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தான் அவர்கள் லம்பாடி இனத்தைப் போல் பல்வேறு இடங்களுக்குச் செல்லக் கூடாது; ஒரே இடத்தில் அவர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்ற ஒரு குறிக்கோளை முன்னிட்டு திருச்சியிலும், உத்திர மேரூரிலும் அவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு அந்த இடத்தை பட்டா வழங்க ஏற்பாடு செய்து தொகுப்பு வீடுகள் கட்டித் தந்து இருக்கிறார்கள். இதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நம்முடைய தானைத் தலைவர் தமிழகத்தினுடைய முதலமைச் சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த நரிக்குறவர்கள் சம்பந்தமாக திருச்சியில் கூட அவர்களுக்கு ஒரு காலனி கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்று சொன்னால் ஒருவர் கூட அவர்களுக்கு எந்தவிதமான வேலையும் தருவது இல்லை. ஒருவர் மட்டும் எஸ்.எஸ்.எல்.சி. வரை கஷ்டப்பட்டு படித்து முன்னுக்கு வந்தும்கூட நான் பலமுறை முயற்சி செய்தும் அவ ருக்கு வேலை கிடைக்கவில்லை. ஆகவே, நரிக்குறவர்களில் படித்து முன்னுக்கு வரக்கூடியவர்களுக்கு ஒரு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பில் அரசு இடம் அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை தாழ்த்தப்பட்ட இனத்தைப் பற்றியும், பழங்குடி இனத்தைப் பற்றியும் உள்ள துறையாக இருப்பதால் இந்த வகுப்பைச் சேர்ந்த அத்தனைக் குறிப்புகளும் மாண்புமிகு முதலமைச்சருடைய கோரிக்கையை ஏற்றுதான் செயல்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இது பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர் களை அணுகி கோரிக்கையை கொண்டு சென்று ஆவன செய் யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை அரசு மருத்துவமனை

*2363—திரு. ஏ. செங்குட்டுவன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவப் பிரிவில் 50 படுக்கைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி ஆதாரங்களைப் பொறுத்து மயிலாடுதுறை மருத்துவமனையில் கூடுதல் கட்டிடங்கள் கட்டும்போது படுக்கைகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை—குத்தாலம், சீர்காழி, பூம்புகார், நன்னிலம் ஆகிய பகுதிகளின் இடையில் இருக்கின்ற ஒரு பெரிய மருத்துவ மனை. 10 படுக்கைகள் மட்டும் தான் அங்கே இருக்கின்றன. 3 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அந்த மருத்துவ மனையில் படுக்கை வசதி இல்லாமல் தாய்மார்கள் பிரசவக் காலத்தில் அடையும் கஷ்டத்தை விட அங்கே தங்கி சிகிச்சை பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த ஆண்டு அரசு 50 படுக்கைகள் கொண்ட பிரசவ வார்டை உருவாக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் குழந்தைகள் நலப் பிரிவுக்கு கட்டிடங்கள் கட்டுகின்ற பணி இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. $3\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவில் அந்தப் பணிமுடியும் தருவாயில் இருக்கிறது. ஆகவே, படிப்படியாக அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து அங்கே புதிய கட்டிடங்கள் கட்டி படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி மருத்துவமனையில் ரத்த சேமிப்பு நிலையம் ஒன்று இருக்கிறது. அது செயல்படாமல் 2 ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. அது மட்டும் அல்லாமல் மேற்படி மருத்துவ மனையில் புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதற்கு டாக்டரும் இல்லை. மற்ற உபகரணங்களும் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேரில் எடுத்துச் சொன்னேன். இந்த ஆண்டு உடனடியாக மருத்துவ வசதி கிடைக்குமா என உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

9–55 மணி.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் இல்லாத இடங்களிலேயெல்லாம் மருத்துவர்களை நியமிக்கிற

1990 ஏப்ரல் 12]

பணிகள் இப்போது துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. நிச்சயமாக, கூடிய விரைவிலே நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இங்கே ரத்த சேமிப்பு நிலையத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெரும்பாலான மருத்துவமனை களிலே ரத்த சேமிப்பு நிலையம் என்பது, வருகிறவர்களிடமிருந்து ரத்தத்தை எடுத்து உடனடியாகக் கொடுக்கிற வசதியோடுதான் ரத்த சேமிப்பு நிலையங்கள் இப்போது செயல்பட்டு வருகின்றன. முழுமையான ரத்த சேமிப்பு நிலையங்களாக அவைகளை அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து, விரிவாக்குகின்ற பணியை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கம் சென்ற ஆண்டு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அது இதுவரையில் செயல்படாமல் இருக்கிறது. அதை செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும். அத்தோடு அந்த மருத்துவ மனையில் 4 ஜெனரேட்டர்கள் மின் சார உற்பத்தி செய்வதற்காக இருக்கின்றன. அந்த ஜெனரேட் டர்களில் 3 பழுதாகி வேலை செய்யாமல் இருக்கின்றன. ஒரு புதிய ஜெனரேட்டர்-பெரியது வாங்கி ஒரு வருடமாக பிரிக்கப் படாமல் அப்படியே வைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் அத்தனையும் செயல்படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் நேரடியாகச் சொல்லி நான் அவரை இயக்குநரிடமே அனுப்பிவைத்து, அவருக்கு முன்பாகவே இயக்குநர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இருந்தாலும், கேள்வி கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டிருக்கிறார்கள். அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களே நேரில் சென்று அதைப் பிரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகப்பேறு மருத்துவமனைகளில், எந்தெந்த மருத்துவ மனையில் மகப்பேறு படுக்கைகள் விஸ்தரிக்கிற திட்டம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தனிக் கேள்வி எழுப்பக் கேட்டுக்கொள்கிறேன்.